கோயம்புத்தூர் மாவட்டம் - ஆனைமலை, கோட்டூர் அருகில் சாலை விபத்து: உயிரிழந்த

# காவல் உதவி ஆய்வாளர் குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் நிவாரண நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, நவ. 2-

**கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை, கோட்டூர் அருகில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த பெண் சிறப்பு காவல் உதவி ஆய்வாளரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்துள்ளார்.**

**இது தொடர்பான முதல்வரின் அறிவிப்பு வருமாறு:-**

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பெண் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திருமதி கிருஷ்ணவேணி (வயது 51) (க/ப.சக்திவேல்) என்பவர் நேற்று (31.10.2024) மாலை அங்கலக்குறிச்சியிலுள்ள தனது வீட்டிலிருந்து இருசக்கர வாகனத்தில் வால்பாறை அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு பணிக்கு சென்று கொண்டிருந்தபோது ஆனைமலை வட்டம், கோட்டூர் அருகில் எதிரே வந்த இருசக்கர வாகனம் எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் காயம் ஏற்பட்டு சிகிச்சைக்காக பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மேல் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

பெண் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திருமதிகிருஷ்ணவேணி அவர்களின் மறைவு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

திருமதிகிருஷ்ணவேணிஅவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் அவருடன் பணியாற்றும் காவல் துறையினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதியாக வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



இராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் நடைபெறும் தேவர் ஜெயந்தி விழாவில் கலந்து கொள்வதற்காக விமானம் மூலம் மதுரை வந்த கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மதுரை மாவட்ட தி.மு.க. சார்பில் வரவேற்றார்.

இராமநாதபுரம் மாவட்டம் - பரமக்குடியில் - மின்சாரம் தாக்கி உயிரிழந்த

# உதவி ஆய்வாளர் குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் நிவாரண நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, நவ. 2-

**இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த உதவி ஆய்வாளரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்துள்ளார்.**

**இது தொடர்பான - முதல்வரின் அறிக்கை வருமாறு:-**

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்துவந்த சரவணன் (வயது 36) (த/பெ.வேலு) என்பவர் 31.10.2024 அன்று அதிகாலை சுமார் 1.00 மணியளவில் பரமக்குடி நகரில் இரவு நேர ரோந்துப் பணியின்போது கீழே விழுந்த இருப்புக் கம்பத்தை அகற்றும்போது எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

உதவி ஆய்வாளர் சரவணன் அவர்களின் மறைவு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

உதவி ஆய்வாளர் சரவணன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் அவருடன் பணியாற்றும் காவல் துறையினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதியாக வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

சேலம் தெற்கு - ஓமலூர்

# சட்டமன்றத் தொகுதிகளின் பாக முகவர்கள் - பூத் கமிட்டி கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிவிப்பு!



சேலம், நவ. 2 -

சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட தொகுதி பார்வையாளர் திரு.பார். இளங்கோவன் அவர்கள் கலந்து கொள்ளும் சேலம் தெற்கு சட்டமன்ற தொகுதி பாக முகவர்கள் (BLA2) மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) கூட்டம், 04.11.2024 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அம்மாபேட்டை கொங்கு திருமண மண்டபத்திலும், இ.ஜி.சுகவனம், கலந்துகொள்ளும் ஓமலூர் சட்டமன்ற தொகுதி கூட்டம் மாலை 05.00 மணிக்கு ஓமலூர் ஜெயந்தி மஹால் திருமண மண்டபத்திலும் நடைபெறும். இக்கூட்டத்தில் தொகுதிக்கு உட்பட்ட கழக நிர்வாகிகளும், தொகுதி பொறுப்பாளர்களும், பாக முகவர்களும் (BLA2) மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்களும் (BLC) தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

இன்று நடைபெறுகிறது!

# விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் அறிக்கை!



விழுப்புரம், நவ. 2 -

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் அவசர செயற்குழு ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

இதுகுறித்து விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர்அறிக்கை வருமாறு:-

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் அவசர செயற்குழு ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் தலைமையில் இன்று (02.11.24 - சனிக்கிழமை) காலை 10.00மணி அளவில் திண்டிவனம் சென்னை தேசிய நெடுஞ்சாலையில் உள்ளஹோட்டல் ஆரியாசில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் கழகத் துணை பொது செயலாளர், வனத்துறை அமைச்சர் மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி அவர்கள் சிறப்புரை ஆற்றுகின்றார் . விழுப்புரம் வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட 3 தொகுதி பார்வையாளர்கள் கடலூர் இள. புகழேந்தி, ப.அப்துல் மாலிக், ஏ. ஜாபர் அலி ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

கூட்டத்தில் மாநில, மாவட்ட, நிர்வாகிகள், பொதுக்குழு, செயற்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் , அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: துணை முதலமைச்சர்உதயநிதிஸ்டாலின் அவர்கள் விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகை,

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவதுசம்பந்தமாக.

வாக்காளர் பெயர்ப் பட்டியல் சரி பார்த்தல் சம்மந்தமாக. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# மறைந்த கவிஞர் தணிகைச்செல்வன் உடலுக்கு மலர் அஞ்சலி!

காஞ்சிபுரம், நவ 2 -

மறைந்த முற்போக்கு எழுத்தாளர் தமிழ்தேசிய தத்துவ கவிஞர் தணிகைச் செல்வன் உடல் மீது அமைச்சர் தா.மோ.அன்பரசன் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், துணை பொதுச்செயலாளர் எஸ்.எஸ்.பாலாஜி எம்.எல்.ஏ., ம.தி.மு.க. துணை பொதுச் செயலாளர் மல்லை சத்தியா உள்ளிட்ட அரசியல் கட்சித் தலைவர்கள் - பல்வேறு கவிஞர்கள்- எழுத்தாளர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து, காணொலிக் காட்சி வாயிலாக, ரூ.8 கோடியே 65 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள உள் விளையாட்டு அரங்கத்தை திறந்து வைத்ததையடுத்து, பர்கூர் அரசு பொறியியல் கல்லூரியில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன், மாவட்ட ஆட்சித்தலைவர் கே.எம்.சரயு ஆகியோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்த. உள்ளாட்சி பிரதிநிதிக்கான(மாமன்ற உறுப்பினர் ) ஊக்கத்தொகை ரூ,10000 த்தினை மாதந்தோறும் பொதுக்குழு உறுப்பினர் 28 வது மாமன்ற உறுப்பினர் இராசு, சந்தோஷ், கழக முன்னோடிகள், ஆதரவற்றோர். முதிர்கன்னிகள், ஆட்டோ டிரைவர்கள், விளையாட்டு வீரர்கள், பள்ளி மாணவர்கள் நலிந்த பேண்டு இசைக் கலைஞர்கள் ஆகியோருக்கு வழங்கிவந்தார் 13 வது தடவையாக இந்த மாதம் இன்று (1.11.2024 வெள்ளிக்கிழமை) ”கைம்பெண் (விதவை) 10 பேருக்கு தலா ரூ,1000 வீதம் கழக நிர்வாகிகள் முன்னிலையில் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் கவிச்சுடர். கவிதைப்பித்தன் அவர்களின் திருக்கரங்களால் வழங்கியபோது. நிகழ்வில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட இலக்கிய அணி துணைத் தலைவர் கவிஞர் ஆ,மரியஎட்வின். வட்டப் பிரதிநிதி மருதமுத்து. அ .அந்தோணி சூசை, எம்.மணிமாறன், அ.பெர்னாட் . டிரைவர் ராஜேந்திரன் ஆகியோர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி.என். பாபு (எ) இளவழகன்

நவம்பர் 2 (2003)



நீதிக்கட்சியைத் தொடர்ந்து கழகத்தில் பணியாற்றிய தனது தந்தையின் வழியொட்டி, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

1979 முதல் 2003 வரை திருவண்ணாமலை நகரக் கழகச் செயலாளராக தொடர்ந்து 24 ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர்.

1986 முதல் 1990 வரை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கற்பகம் கூட்டுறவு மொத்த பண்டக சாலை தலைவராகவும், திருவண்ணாமலை நகர கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக மிசா கைதியாக 48 நாட்களும்; 1986ல் நடைபெற்ற மொழிப் போராட்டத்தில் பங்கேற்று 45 நாட்கள் சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

கே.ஆர்.முருகேசன் தலைமை! கேரளா வருகை தரும்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## கேரளமாநில இளைஞர் அணியினருக்கு ஆர்.எல். பிரின்ஸ் வேண்டுகோள்!

திருவனந்தபுரம் நவ, 2

தமிழ்நாட்டு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (2.11.2024 சனிக்கிழமை) மலையாள மனோரமா நாளிதழ் விழாவில் பங்கேற்க கேளர மாநிலம் கோழிக்கோடு நகருக்கு வருகை தர உள்ளதால், இன்று காலை 10 மணிக்கு கோழிக்கோடு விமான நிலையத்தில், எழுச்சி மிகு இளைஞர் அணி சார்பில் மாநில அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் வரவேற்பு அளிக்கப்படுகிறது என்று கேரள மாநில இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.எல்.பிரின்ஸ் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

இன்று (2.11.2024 - சனிக்கிழமை) கேரள மாநிலம் கோழிக்கோடு நகரில் மலையாள மனோரமா நாளிதழின், மலையாள ஹோரஸ் இலக்கியம் மற்றும் கலை விழா நடைபெறுகிறது

இவ்விழாவில் பங்கேற்பதற்காக நாடு போற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களது திராவிட மாடல் நல்லாட்சிக்கு சிறப்பு சேர்த்துக் கொண்டிருக்கும் கழக இளைஞர் அணிச் செயலாளர்துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (2.11.2024 சனிக்கிழமை) காலை 10 மணிக்கு தமிழ்நாட்டில் இருந்து விமானம் மூலம் கேரள மாநிலம் கோழிக்கோடு நகருக்கு வருகை தருகிறார்கள்.

அவருக்குகோழிக்கோடு விமான நிலையம் அருகில் கேரள மாநில தி.மு.க. இளைஞர் அணி சார்பில் என் (ஆர்.எல்.பிரின்ஸ்) தலைமையிலும், கேரள மாநில தி.மு.க. செயலாளர் கே.ஆர்.முருகேசன் முன்னிலையிலும் சிறப்பான எழுச்சி மிகு வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது.

எனவே இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் நமது கேரள மாநில இளைஞர் அணித் தோழர்கள் அனைவரும் வெண் சீருடை அணிந்தும், தங்கள் கரங்களில் இரு வண்ணக் கொடியைகையில் ஏந்தியும் வருகை தந்து நமது இளைஞர் அணிச் செயலாளர், துணை முதல்வர் அவர்களை வரவேற்றிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஆர்.எல். பிரின்ஸ் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சியில் தீப ஒளி திருநாள் பண்டிகையை முன்னிட்டு தூய்மை பணியாளர்கள், மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு தீப ஒளி திருநாள் பரிசுத்தொகுப்பினை செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் வழங்கினார். உடன் பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், செயல் அலுவலர் அண்ணாதுரை உள்ளனர்.



தீபாவளியை முன்னிட்டு புதுக்கோட்டை மாலையீடு டோல்கேட்டில் இளைஞர் நற்பணி மன்றமும் ஊரார்களும் இணைந்து நடத்திய 44ஆம் ஆண்டு மாபெரும் வெற்றிக் கோப்பைக்கான சைக்கிள் போட்டியினை மாமன்ற உறுப்பினர் காதர்கனி மற்றும் வட்ட கழக செயலாளர் மாலையீடு பிரபு ஆகியோர் ஏற்பாட்டில் மாநகர செயலாளர் ஆ.செந்தில் தொடங்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு கோப்பை மற்றும் ரொக்க பரிசு வழங்கினார்.. உடன் மாமன்ற உறுப்பினர் பால்ராஜ், கழக நிர்வாகிகள் தனபால், கம்பன் நகர் ரமேஷ், வெற்றிச்செல்வம், சேக்கத்தா, தங்கதுரை, செல்வம், செல்லையா, பாரதிதாசன் ,சரவணன், பத்மநாபன், நகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.என். ஞானவேல் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.